# அன்பு பகிர்வு இயக்கம்

Shalom

# செய்தி மலர்

| | |
|---|---|
| தனிப்பிரதி | ₹. 10/- |
| ஆண்டுச் சந்தா | ₹. 100/- |
| ஆயுள் சந்தா | ₹. 1000/- |

மலர் :12 இதழ் :10 ஆகஸ்ட் 2016

பீல் ஆதிவாசி மக்கள்
தரிசன பணியில்




# தேசத்திற்கு ஷேமத்தை கொடுப்பேன்

2 நாளாகமம். 7:14

ஆசிரியர்.
பேராயர் வே. தேவதாஸ்



# உங்கள் சகோதரனிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே!

ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் எங்கள் அன்பின் வாழ்த்துக்கள். தேவ கிருபையாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும், தியாகமான ஆதரவுகளினாலும் பீல் மக்களின் மத்தியில் கடந்த ஜூலைமாதம் வெகுசிறப்பாக நடைபெற்றது. உங்கள் யாவருக்காகவும் தேவனை துதித்து உங்களுக்கு நன்றி சொல்லுகிறோம்.

கடந்த ஜூலை மாதத்தில் 1 முதல் 6ம் தேதி வரை 6 நாட்கள் பணித்தளத்திலே மூன்று மாநிலங்களிலும் ஊழியர்கள் குடும்பமாக மூப்பர்களுடன் இணைந்து 25 வருட வெள்ளிவிழா ஆண்டின் ஆசீர்வாதங்களை பகிர்ந்துகொண்டு தேவநாமத்தை மகிமைபடுத்தினோம்.

மேலும் இந்த வருடத்தில் ஊழிய தலைவர்களும், அனைத்து போதகர்களும், மூப்பர்களும் மற்றும் விசுவாசிகள் தேவனுக்காக ஏதாகிலும் செய்யவேண்டும் என்று அர்ப்பணித்துள்ளார்கள். குறிப்பாக 1000 சுதேச ஊழியர்கள், 1000 ஸ்திர சபைகள், 1 இலட்சம் ஆதிவாசி விசுவாசி குடும்பங்களை தேவனண்டை நடத்த தரிசனத்துடன் ஜெபிக்க, உழைக்க, கொடுக்க, அர்ப்பணித்துள்ளார்கள்.

தவிர்க்க முடியாத சில காரணங்களினால் ஷாலோம் ஊழியத்தின் 25வது ஆண்டு வெள்ளிவிழா ஆண்டு மலர் வெளிவருவது தாமதமாகிவிட்டது என்பதற்காக வருந்துகிறோம். இந்த மலர் கர்த்தருக்கு சித்தமானால் ஆகஸ்ட் மாதம் கண்டிப்பாக வெளியிடுவோம் என்று அறிவிக்கிறோம். உங்கள் கரங்களில் கிடைக்கும்படி ஆவனசெய்கிறோம்.

ஷாலோம் வெள்ளிவிழா கொண்டாட்டம், (1.7.2016) எங்கள் திருமண நாள் வைபவம் (8.7.2016) மற்றும் மருத்துவ படிப்பை முடித்து ரஷ்யாவில் இருந்து வந்த ஷெக்கினாவிற்கும் உங்கள் ஜெபத்திற்காகவும், வாழ்த்துக்களுக்காகவும், வெகுமதிகளுக்காகவும் தேவனை துதித்து உங்களுக்கு நன்றி கூறுகிறோம்.

தேவன்தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக

"..***பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்.***" ஆதி. 12:3

என்ற வசனத்தின்படி தேவன் தாமே உங்களை பலமடங்கு ஆசீர்வதிப்பாராக.

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

(பேராயர்.V. தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள
09377445468



# தேசத்திற்கு ஷேமத்தைக் கொடுப்பேன்

சிறப்பு செய்தி : **சகோ. வே. தேவதாஸ்**

நம்முடைய ஆண்டவர் தேசத்தை ஆசீர்வதிக்கிற தேவன். தேவன் தனிப்பட்ட மனிதனையோ, குடும்பத்தையோ மட்டுமல்ல, முழு சமுதாயத்தையும், தேசத்தையும் ஆசீர்வதிக்கும் கர்த்தராக இருக்கிறார். வேதம் சொல்கிறது, தேசத்திற்கு ஷேமத்தை, ஆசீர்வாதத்தை தரும்படியாக தேவன் தம்முடைய நாமம் தரிக்கப்பட்ட ஜனங்களைத் தான் தெரிந்துள்ளார். அது மட்டுமல்ல தம்முடைய ஜனங்கள் தேவ சபையில் வந்து தேவனைத் தேடும்போது ஆசீர்வாதத்தை தேசத்தின் மேல் தேவன் கொடுக்கிறார்.

## 1. சபை தேசத்திற்கு ஆசீர்வாதம் :

2 நாளா. 7:1-11 வாசித்துப் பாருங்கள் தேவாலயத்தை பிரதிஷ்டை செய்து முடித்தபோது அக்கினி பரலோகத்திலிருந்து புறப்பட்டு வந்தது. மட்டுமன்றி ராஜாவாகிய சாலமோனுக்கு தேவன் தரிசனமாகி வாக்குத்தத்தம் செய்கிறார். ஆலயத்தில் தேவஜனங்கள் கூடி ஜெபிக்கும்போது ஷேமத்தை, ஆசீர்வாதத்தை தேவன் தருகிறார். 6ம் அதிகாரத்தில் தேசத்தில் குறைவு உண்டானது. யுத்தங்களும், பஞ்சங்களும் வந்தன. அப்போது புறஜாதி மக்களும் சாலமோன் ராஜாவும் ஆலயத்திற்கு தேடிவந்து (2நாளா. 6:32,33) தேசம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என வேண்டிக் கொண்டார். அதை அப்படியே தேவன் ஏற்றுக் கொண்டார். எனவே, சபை மூலமாக தேவன் தேசத்தையும், தேசத்திலுள்ள ஜனங்களையும் ஆசீர்வதிக்க விரும்புகிறார்.

சபையில் நாம் தேசத்திற்காக, நல்வாழ்வுக்காக ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்கும் போது சபையார் ஜெபத்தை கேட்கிறார். புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தல சபையில் தேவஜனங்கள் ஜெபித்தார்கள். அந்த இடம் அசைந்தது. தேசமெங்கும் சுவிசேஷம் பரவியது, அப். 12ம் அதிகாரத்தில் சபையார் ஊக்கமாக ஜெபித்தார்கள். தேவ ஊழியர் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். தேவனுக்கு மகிமை செலுத்தாத ஏரோது ராஜா புழுபுழுத்து செத்தான். சபைக்கு தேவன் அதிகாரம் தந்துள்ளார். மத். 16:18ன்படி பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. சபை கூடி ஜெபிக்கும்போது தேவன் தேசத்தை ஆசீர்வதிக்கிறார்.

## 2. தேவ ஜனங்கள் தேசத்திற்கு ஆசீர்வாதம் :

வேதத்தை ஆராய்ந்து பாருங்கள், தேவஜனங்கள் எங்குண்டோ அங்கெல்லாம் ஆசீர்வாதம். யோசேப்பைக் குறித்து என்ன காண்கிறோம்? சிறைச்சாலையில் அடிமையாக இருந்த அவன் முழு எகிப்தியருக்கும்

ஆசீர்வாதமாக மாற்றினார். யோசேப்பின் பரிசுத்தமும், அவனுக்கு தேவன் தந்த தரிசனத்தின் மேல் கொண்ட அவனது விசுவாசமும் அவனை உயர்த்தின. இன்றைக்கும் நம் தேசம் ஆசீர்வதிக்கப்பட, தேவ ஆவியால் நிரப்பப்பட்ட யோசேப்புகள் எழும்ப வேண்டும்.

தானியேலைக் குறித்து என்ன காண்கிறோம்? அந்நிய தேசத்தில் சிறை வைக்கப்பட்டு ஒரு அடிமையாக சென்றிருந்தாலும், சர்வ வல்லமையுள்ள யெகோவா தேவனுக்கு சாட்சியாக நின்றார். தான் ஆராதிக்கும் தேவன் விடுவிக்கிறவர்.... விடுவிக்காமல் போனாலும் அவரை விட மாட்டோம் என்று அந்த தேவன் பேரில் கொண்ட விசுவாசம் அல்லவா சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ மூலம் தேவனுடைய நாமம் உயர்த்தப்பட்டது. தானியேல் தன் ஜெப வாழ்க்கையிலும், தேவனுடன் கொண்ட உறவிலிருந்தும் விலகவில்லை. அந்நிய தேசத்தில் தேசத்திற்காக, ராஜாவுக்காக பணிபுரிந்தாலும் கர்த்தருக்கு முதலிடம் தந்த படியால் வேளை வந்தபோது சொப்பனத்திற்கு பதில் சொல்ல தேசத்தில் எவருமே இல்லாதபடி தேவன் தானியேலை ஞானத்தினால் நிரப்பி உயர்த்தி தேசத்திற்கு ஆசீர்வாதமாக மாற்றினார். தானியேல் போல் தேசத்தில் தேவனுக்காக எழும்பும் ஜெபவீரர், விசுவாச வீரர்கள் தேவை.

மற்ற மதத்தைச் சேர்ந்த ஒரு பேராசிரியர் ஒருவர் பின்வருமாறு கூறினார். "**கிறிஸ்தவர்களாகிய நீங்கள் இயேசுவைப் போல் வாழ்ந்தால் நாளைக்கே இந்த உலகம் உங்கள் காலடியில் வந்து விழுந்துக் கிடக்கும்**." இந்த வார்த்தைகளை கேட்ட ஜான் ஸ்காட் என்பவர் "**கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசு கிறிஸ்துவைப் போல் வாழ்வோமானால் இன்றைக்கே இவ்வுலகம் நமது காலடியில் வந்து விழுந்து கிடக்கும். சுவிசேஷம் பரவுவதற்கு மாபெரும் தடையாக இருப்பது திருச்சபையும், தேவஜனமாகிய நாமே**" என்று கூறினார். ஆகவே அவர் நாமம் தரிக்கப்பட்ட தேவஜனங்களாகிய நாம் அவருக்கு சாட்சிகளாய் ஜீவிப்போம். தேசத்திற்காக ஜெபிப்போம். பரிசுத்த பவுல் 1 தீமோ. 2: 1-3 வரை பின்வருமாறு கூறுகிறார். நான் பிரதானமாய் சொல்கிற புத்தி என்னவெனில் எல்லா மனுஷருக்காகவும், விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும்; நாம் எல்லா பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும், அதிகாரம் உள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும், பிரியமுமாய் இருக்கிறது.

தேசம் ஆசீர்வதிக்கப்பட தேவஜனங்களாகிய நாம் தேசத்திற்காக ஜெபிக்க கடமைப்பட்டுள்ளோம். அதுவே வேதம் காட்டும் வெளிச்சமாகும். நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். (மத். 5:14) என்று இயேசு கூறினார்.

**3. தேசத்திற்கு தேவன் தரும் ஆசீர்வாதங்கள் :**

தேவஜனங்கள் சபையாக கூடி தேவனுடைய முகத்தைத் தேடும்போது, தங்களை தாழ்த்தும்போது, பொல்லாத வழிகளை விட்டு விலகும்போது தேவன் முதலாவது தேசத்திற்கு ஷேமத்தைத் தருகிறார். (2 நாளா. 7:14)

அடுத்தபடியாக தேசத்தில் இளைப்பாறுதலைக் கட்டளையிடுகிறார். ஆசா ராஜாவின் காலத்தில் அப்படியாக இருந்தது. நம்முடைய தேவனாகிய கர்த்தர் அவனுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டதினால், அந்த வருஷங்களில் அவனுக்கு விரோதமான யுத்தம் இல்லாதிருந்தது. (2 நாளா.14:6.7)

“நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி ஏற்ற காலத்திலே மழையைப் பெய்யப் பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்” (எசேக்.34:26)

“தேசமே பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.” (யோவேல் 2:21)

“அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும், பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப்பண்ணுவார். களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரசமும், எண்ணெயும் வழிந்தோடும்.” (யோவேல் 2:23,24)

“நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும், ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்.” (யோவேல் 2:28,29)

“பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.”(ஏசா 11:9)

பாரத தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஆவியானவர் அப்போஸ்தலர் தோமாவையே முதல் நூற்றாண்டில் அனுப்பி வைத்தார். ஒவ்வொரு நூற்றாண்டிலும் தேவன் அனுப்பி வைத்த கடல் கடந்து வந்த மிஷனெரிமார்களுக்காக நன்றி கூறுவோம். தொடர்ந்து பாரத தேசம் ஆசீர்வதிக்கப்பட சுவிசேஷ தீபம் ஒவ்வொருவர் இருதயத்தில் ஊற்றப்பட சபையாக, தேவ ஜனமாக சாட்சியாய் ஜீவிப்போம். இயேசுவின் வருகைக்கு அநேகரை ஆயத்தம் செய்வோம்.

---



## ஆசீர்வாதமான இந்தியா



25 வது ஆண்டில்

# ஷாலோம் ஊழிய வெள்ளிவிழா ஆண்டு

## சிறப்பு பணிகளும் திட்டங்களும்

சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கும் பீல் ஆதிவாசி ஜனங்கள்



தேவ கிருபையால் இந்த 25ம் வெள்ளிவிழா ஆண்டில் அனைத்து 600 பீல் சுதேச ஊழியர்கள் ஆளுக்கொரு புதிய சுதேச ஊழியர்களை எழுப்பவும்; ஒரு புதிய சபையை உருவாக்கவும்; ஒவ்வொரு சபையில் உள்ள விசுவாசி குடும்பங்கள் குறைந்தது 4 குடும்பங்களை இயேசுவண்டை வழி நடத்தவும் தீர்மானித்து ஜெபித்து செயல்பட எங்களுடன் அர்ப்பணித்து உள்ளார்கள். ஆகவே 25ம் வெள்ளி விழா ஆண்டு முடிவடையும் போது 2016 இறுதிக்குள் 1000 பீல் சுதேச ஊழியர்கள்; 1000 கிராம சபைகள் மற்றும் ஒரு இலட்ச விசுவாச குடும்பங்களை தேவ நாமம் மகிமைப்பட பெற்றுக் கொள்வோம் என விசுவாசிக்கிறோம். ஆகவே இந்த ஆண்டின் ஊழியங்களுக்காக, சிறப்புத் திட்டங்களுக்காக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

## வெள்ளி விழா ஆண்டு சிறப்பு கட்டிடப் பணி திட்டங்கள்

ஷாலோம் பவன், தாகோத் – குஜராத். **(Shalom Bhavan, Dahod - Gujarat)**

தேவ கிருபையால் உருவாக்கப்பட்ட 25 வருட பணிகளை நிர்மானிக்கவும், செயல்படுத்தவும் குஜராத் தாகோத்தில் பணித்தள அலுவலகம் உள்ளது. இந்தக் கட்டிடம் சுமார் 3600 சதுர அடி நிலத்தில் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டிடமாகும். இதை உடைத்து விட்டு, கீழ்க்காணும் அனைத்து துறைகளும் (Departments) ஒருங்கிணைந்து செயல்பட ஷாலோம் பவன் கட்டிடத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.




ஷாலோம் பவன் மாதிரிப்படம்

- ❖ 3 மாநில திருச்சபைகளின் ஒருங்கிணைப்புப் பணி (Shalom Diocese / Synod Network)
- ❖ சபை வளர்ச்சிக்கான அனைத்துப் பயிற்சிகளின் திட்ட மையம் (Training Unit)
- ❖ ஊழியர் பயிற்சி, வேதாகமப் பயிற்சி, ஓய்வுநாள் பள்ளி மற்றும் VBS பயிற்சிகள்.
- ❖ நிதித்துறை வளர்ச்சி. (Finance Department Audio / Video Studio & Recording Centre.
- ❖ தகவல் தொடர்புத் துறை. (Communication – மாத பத்திரிகை, மாத அறிக்கை, ஆலய அறிக்கை, சுதேச ஊழியர் அறிக்கை & மாணவர்கள் அறிக்கை)
- ❖ பீல் மக்களுக்காக, தேசத்திற்காக 24 மணி நேரம் ஜெபிக்க ஷாலோம் ஜெப மையம்.
- ❖ Conference Hall – குறைந்தது 100 பேர்கள் கூடி ஜெபித்து திட்டமிட.
- ❖ Literature, CD/ VCD, வசன அட்டைகள் மற்றும் ஆலயத்திற்குத் தேவையான பொருட்களை விற்கக்கூடிய இலக்கிய சேவை பிரிவு.
- ❖ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் கல்விப்பணி, மருத்துவப் பணி மற்றும் சமுதாய முன்னேற்றப் பணிகளுக்கான அலுவலகம்.
- ❖ Sponsor Related Department. ❖ Car & Two Wheeler Parking வசதி.
- ❖ பேராயர் மற்றும் பேராயர் அம்மா அவர்களுக்கான அலுவலக அறைகள்.
- ❖ மேலும் இதர பணிகள்....

## ஷாலோம் பேராலயம், அந்தர்வேலியா – மத்தியப்பிரதேசம்

இந்நாட்களில் மத்தியப்பிரதேசத்தில் பீல் மக்கள் மத்தியில் சுமார் 200க்கும் அதிகமான சபைகளை வருகிறார். எழுப்புதலை கட்டளையிட்டு ஊழியர்கள் கூடுகை, மூப்பர்கள் கூடுகை, வாலிபர் கூடுகை, சிறுவர்கள் முகாம், எழுப்புதல் முகாம்கள், ஜெபமுகாம்கள் மற்றும் பகுதிவாரிய திட்டக் கூடுகைகளை நடத்த அந்தர்வேலியா கிராமத்தில் தேவன் நமக்கு சுமார் 2 ஏக்கர் நிலத்தை தந்துள்ளார். அங்கு 120 X 40 அளவில் Hall ஒன்றும் மேலும் தேவையான அறைகள் கட்டப்பட Compound wall கட்டப்பட இரண்டு ஊழியர்கள் தங்கியிருக்க, ஜெப ஊழியங்கள் நடத்தப்பட கட்டிடங்கள் வேண்டும்.



## ஷாலோம் மிஷன் பள்ளி மற்றும் விடுதி, பிஜல்பூர் – இராஜஸ்தான்

தேவ கிருபையால் 30 பிள்ளைகளுடன் சிறிய வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஷாலோம் பள்ளி இன்று இராஜஸ்தானில் பிஜல்பூர் கிராமத்தில் 1 முதல் 8 வரை வகுப்புகள் நேர்த்தியாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக நம் இராஜஸ்தான் ஊழியர்கள், மூப்பர்கள் பிள்ளைகள் 300க்கும் அதிகமாக படித்து வருகிறார்கள்.

கட்டப்பட்ட சிறிய அறைகளில் தான் பள்ளி வகுப்புகள் உள்ளது. பகல் வகுப்பறையாகவும் இரவில் தங்கும் அறையாகவும் உபயோகித்து வருகிறார்கள். இத வெள்ளிவிழா ஆண்டில் பள்ளிக்கூடத்துக்கு 10 அறைகள் மற்றும் 100 பெண் பிள்ளைகளுக்கான விடுதி அறைகள் கட்டப்பட வேண்டும்.



ஷாலோம் மிஷன் பள்ளி மாதிரிப்படம்,
பிஜல்பூர், இராஜஸ்தான்.

## மேற்கண்ட 3 வெள்ளி விழா திட்டங்களை நிறைவேற்ற ரூ. 300 இலட்சங்கள் தேவைப்படுகிறது

- **ரூ. 1 இலட்சம் கொடுக்கக்கூடிய 300 ஆதரவாளர்கள் (அல்லது)**
- ரூ. 50 ஆயிரம் (அல்லது) ரூ. 20 ஆயிரம் (அல்லது) ரூ. 10 ஆயிரம் கொடுக்கக்கூடிய ஆதரவாளர்கள் (அல்லது)
- தங்களால் முடிந்த காணிக்கையைக் கொடுக்கக் கூடிய ஆதரவாளர்களை குடும்பமாக, குழுவாக, ஊழியங்களாக, சபைகளாக தேவன் எழுப்பும்படியாக ஜெபியுங்கள்.

மேலும் மாபெரும் வெள்ளிவிழா திட்டத்திற்கென உங்களால் முடிந்த நிதி உதவியை ஜெபித்து Sharing Love Mission என்ற பெயரில் DD, Cheque or Net transferல் “ஷாலோம் வெள்ளிவிழா திட்டத்திற்கான நிதி உதவி” என குறிப்பிட்டு அனுப்பவும். ஜெபித்து கொடுக்கக்கூடிய புதிய ஆதரவாளர்களை அறிமுகம் செய்து வெள்ளிவிழாத் திட்டங்களை நிறைவேற்ற முன் வாருங்கள்.

**“.....எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்லவேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்.”** நெகே. 2:18

# தமிழகத்தில் நடைபெற்ற முன்னேற்றப்பணி ஊழியங்கள்

**25வது ஆண்டு நிறைவு ஸ்தோத்திர கூட்டம் - 01.07.2016**

தேவனுடைய கிருபையினால் நம் ஷாலோம் ஊழியத்தின் 25வது ஆண்டு ஸ்தோத்திரகூட்டம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இந்த கூட்டத்தில் **பேராசிரியர் கிறிஸ்டோபர்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள்.

**பண்ணைவிளை அக்கினி ஜெப ஊழியங்கள் - 02.07.2016**

தேவனுடைய கிருபையினால் நம் ஷாலோம் ஊழியர்கள் சகோ. ஆலன் எல்விஸ், சகோ. ஜேசுதாசன் அவர்கள் கலந்துக் கொண்டு ஆராதனையையும், ஊழியத்தைக் குறித்து பகிர்ந்துக் கொண்டு கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து ஜெபத்தையும் நடத்தினார்கள். இதற்கு உதவியாக இருந்து நமக்கு இந்த வாய்ப்பை தந்த **சகோ. அந்தோணி** அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கொங்கந்தான் பாறை, திருநெல்வேலி - 03.07.2016**

கர்த்தருடைய பெரிதான கிருபையால் நம் ஷாலோம் ஊழியர்கள் கொங்கந்தான் பாறை ஆலயத்தில் ஞாயிறு ஆராதனையில் நம் ஊழியங்களைப் பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை பாராட்டினார். இந்த வாய்ப்பை தந்த ஊழியர். ஆரோன் செல்வின் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**சிவந்திபுரம் காட்டேஜ் ஜெபம் - 07.07.2016**

தேவனுடைய பெரிதான கிருபையால் நம் ஷாலோம் ஊழியர்கள் உபவாச ஜெபத்தை நடத்தினார்கள். இதில் நம் ஷாலோம் ஊழியர் டேவிட், சகோதரி லதா அவர்களும் கலந்துக் கொண்டு ஜெபத்தை நடத்தினார்கள்.

**டோனாவூர் நல்லமரம் சி.எஸ்ஐ. ஆலயம் - 10.07.2016**

தேவனுடைய பெரிதான கிருபையினால் டோனாவூர் சி.எஸ்ஐ. ஆலயத்தில் நம் ஷாலோம் ஊழியர்கள் சகோ. ஜேசுதாசன், சகோதரி லதா அவர்களும் ஊழியத்தைக் குறித்துப் பகிர்ந்துக் கொண்டு செய்தி கொடுப்பதற்கும் வாய்ப்பளித்த **ஊழியர் ஆசீர்வாதம்** அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**சென்னை, Church of God Full Gosphel of India - 10.07.2016**

சென்னை, அம்பத்தூரில் புதூர்-ல் Church of God Full Gosphel of India ஆலயத்தில் காலை 8.30 ஆராதனையில் பேராயர் தேவதாஸ் அவர்கள் ஷாலோம் ஊழியத்தை பகிர்ந்து செய்தி அளித்தார்கள். ஆசீர்வாதமாக இருந்தது. சென்னை, முகப்பேறு Victory Tabernacle ஆலயத்தில் 12.15 ஆராதனையிலும் **பேராயர் தேவதாஸ்** அவர்கள் செய்தி அளித்தார்கள். வாய்ப்பளித்த போதகருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

# குஜராத் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

**Pr.வார்சிங் பர்மார்** சிமளியா

45 வயதுள்ள கங்கா என்ற சகோதரி புற்று நோயினால் 3 வருடமாக பாதிக்கப்பட்டு சுவாசிக்க முடியாமல் கஷ்டப்பட்டார். அதிக பணம் செலவழித்து மந்திரம் செய்தும் இந்நோயிருந்து விடுதலை கிடைக்கவில்லை. ஷாலோம் விசுவாசி மூலம் இயேசுவை விசுவாசித்து இவருடைய வீட்டில் இருந்த இந்து கோயிலை இடித்து போட்டவுடன் பரிபூரண விடுதலை கிடைத்தது.

சங்கவி என்ற சகோதரியின் மகன் 3 வருடமாக குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். சங்கவி இயேசுவை விசுவாசித்து தேவ சமூகத்தில் கண்ணீரோடு ஜெபித்தபோது குடிப்பழக்கம் மாறி விடுதலை கிடைத்தது.

**Pr. ரத்தன் மாவி** கங்கேலா

மீனா என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவருடைய வீட்டிற்கு ஊழியர் சென்று ஜெபித்தபோது அசுத்த கிரியை நீங்கி விடுதலை கிடைத்தது.

ஜமுனா என்ற சகோதரி கால் வலியினால் கஷ்டப்பட்டார். ஷாலோம் விசுவாசி மூலம் இயேசுவை ஏற்றுக்கொண்டு பாரத்தோடு ஜெபித்த வேளையில் அற்புத சுகம் கிடைத்தது.

**Pr.மன்னு பாபோர்** சானேசர்

கவிதா என்ற சகோதரியின் வயிற்றில் கட்டி இருந்தது. அதிக பணம் செலவழித்து, ஆடு, கோழிகளை வெட்டி பலி செலுத்தியும் சரியாகவில்லை. இயேசுவின் மீது நம்பிக்கை வைத்து கண்ணீரோடு ஜெபித்தபோது கட்டி மறைந்து பரிபூரண விடுதலை கிடைத்தது.

**Pr.எத்தர்சிங் டாமோர்** தாட்கட்தலா

ஹத்ரியாபாய் என்ற சகோதரன் ஒரு வருடமடாக அசுத்த ஆவியினால் அலைகழிக்கப்பட்டு எல்லாரையும் கெட்ட வார்த்தைகளினால் பேசிக்கொண்டேயிருப்பார். இவரை சபைக்கு அழைத்துச் சென்று பாரத்தோடு ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்.

தினேஷ் என்ற சகோதரன் கேன்சர் வியாதியினால் பல வருடமாக வேதனைப்பட்டுக்கொண்டிருந்தார். எங்கு சென்றாலும் விடுதலை கிடைக்காத நிலையில் சபை ஊழியர் ஒருவர் மூலம் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு கண்ணீரோடு ஜெபித்தபோது கேன்சரிலிருந்து விடுதலைக் கிடைத்தது.

**Pr. சந்து டாமோர்** ஹட்மத்கூ

கீதா என்ற சகோதரியின் கழுத்தில் கட்டி இருந்தபடியால் தண்ணீர் குடிக்க முடியாமல் வேதனைப்பட்டார்கள். ரூ. 10,000 செலவு செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இந்த சகோதரியை சபைக்கு அழைத்து வந்து சபையார் அனைவரும் இணைந்து கண்ணீரோடு ஜெபித்தபோது கட்டி உடைந்து விடுதலைப் பெற்றார்.

# மத்தியப்பிரதேசம் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

**Pr. தெரு டாமோர்** — சாஜே நானியா

ரசினாபேன் என்ற சகோதரி ஒன்றரை வருடமாக இரத்தப்போக்கு வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் சரியாகவில்லை. சபை விசுவாசி ஒருவர் மூலமாக இயேசுவை விசுவாசித்து சபைக்கு வந்து பாரத்தோடு ஜெபித்தபோது இரத்தப்போக்கில் இருந்து விடுதலைப் பெற்றார்

**Pr. ராம்சிங் வாசுனியா** — தேவ்

மேத்துகாமட் என்ற சகோதரன் 2 வருடமாக காது கேட்காமல் இருந்தார். மந்திரம் செய்து ஆடு, கோழிகளை வெட்டி பலியிட்டும் விடுதலை கிடைக்கவில்லை. இயேசுவை விசுவாசித்து சபைக்கு சென்று ஜெபித்தபோது காது கேட்க ஆரம்பித்தது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**Pr. கைலாஷ் புரியா** — பாடாகோசாயா

சர்தார்பாய் என்ற சகோதரனின் மனைவி 4 நாட்களாக கை மற்றும் கால் வலியினால் வேதனைப்பட்டார். பல வைத்தியம் செய்தும் எந்த வித பலனுமில்லை. ஊழியரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபித்தபோது அற்புத சுகத்தைப் பெற்றார்.

மனேஸ்பாய் என்ற சகோதரன் மருத்துவப்படிப்பை முடித்துள்ளார். திடிரென மனமடிவு உண்டாகி அங்கும் இங்கும் அலைந்து மூளை செயல் இழந்து அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். எத்தனையோ மருத்து சிகிச்சை செய்தும் எந்த வித பலனுமில்லை. இறுதியில் எனது பாட்டி மருத்துவரிடம் என்னை அழைத்துசென்றார்கள். ஊழியர் கண்ணீரோடு ஜெபித்தபோது பரிபூரண விடுதலையை தேவன் கொடுத்தார்.

**Pr. ரம்சு புரியா** — கச்சால்தாரா

பப்பு என்ற சகோதரன் 15 வருடமாக அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். ஆடு, கோழிகளை வெட்டி பலியிட்டும் பல இடங்களுக்கு சென்று மருத்துவ சிகிச்சை செய்தும் விடுதலை கிடைக்கவில்லை. இந்நிலையில் ஷாலோம் ஊழியரிடம் எனது பெற்றோர் என்னை அழைத்து சென்று கண்ணீரோடு ஜெபித்தவேளையில் கர்த்தர் பரிபூரண விடுதலையை கொடுத்தார்.

**Pr. கல்சிங்புரியா** — உதய்புரா

கல்சிங்பாய் என்ற சகோதரனின் மனைவி கமாதேவிபேன் 7 வருட பிசாசின் பிடியினால் அலைகழிக்கப்பட்டு வேதனைப்பட்டார்கள். பல இடங்களுக்கு சென்று ஆடு, கோழிகளை வெட்டி பலியிட்டும் பலனில்லை. இந்நிலையில் ஷாலோம் சபைக்கு சென்று ஜெபித்தபோது இயேசு பரிபூரண விடுதலைக் கொடுத்தார்.

**Pr. தும்சிங் புரியா** — உபேராங

கீத்தாபேன் என்ற சகோதரியின் வயிற்றில் குழந்தை தலைகீழாக உள்ளது. என மருத்துவர் கூறினார். இதை ஊழியரிடம் அறிவித்து ஊழியரும், மனைவியும் பாரத்தோடு ஜெபித்தவேளையில் நல்ல சுகப்பிரசவத்தை தேவன் கட்டளையிட்டார்.

# இராஜஸ்தான் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

**Pr. சுரேஷ் மச்சார்** — சென்ட்மார்

கமலாபேன் என்ற சகோதரியின் குடும்பம் தேவதைகளை வழிபாடு செய்பவராகவும், மந்திரத்திற்கு அடிமையாகவும் இருந்தார்கள். இந்த மந்திர காரியங்களினால் இவரது கணவர் சரீரவியாதியினால் பாதிக்கப்பட்டு மூளை செயல்படாமல் எந்த வேலையும் செய்ய முடியாமல் இருந்தார். இந்நிலையில் ஊழியர் சுரேஷ் அமளியார் அந்த வழியே நடந்து போனார். அவரை அழைத்து இக்காரியங்களை கூறி பாரத்தோடு ஜெபித்தார்கள். நாங்களும் இயேசுவை முழுமையாய் ஏற்றுக்கொண்டு ஜெபித்தபோது எனது கணவருக்கு தெளிந்த புத்தியை தேவன் கட்டளையிட்டு விடுதலைப் பெற்றார்.

**Pr. ரமேஷ் கட்டாரா** — தும்மட்பாடி

கமிளாபேன் என்ற சகோதரி 4 வருடமாக ஆஸ்துமா வியாதியினால் வேதனைப்பட்டிருந்தார். பல மருத்துவம்,மந்திரம் பார்த்தும் ஆடு,கோழிகளை பலி செலுத்தியும் எந்த வித சுகமும் கிடைக்கவில்லை. இயேசுவை முழுமையாய் விசுவாசித்து சபைக்கு வந்து ஜெபித்தபோது ஆஸ்துமா வியாதியில் இருந்து விடுதலையை பெற்றுக்கொண்டார்.

**Pr. நாத்துலால் கராசியா** — ரோகன்யாமெகஹி

மோயிபேன் என்ற சகோதரி அசுத்த ஆவயினால் பயங்கரமாக பாதிக்கப்பட்டு சாலைகளில் அலைந்து திரிந்தார். தினமும் வீட்டிற்கு மருத்துவரை அழைத்து மந்திரம் செய்தும், மருத்துவம் செய்தும் பள்ளி வாசலுக்கு அழைத்து சென்றும் விடுதலைக் கிடைக்கவில்லை. மரிக்கும் தருவாயில் இருந்த சகோதரியை இவரது கணவர் தாவ்ராபாய் ஷாலோம் ஊழியரிடம் அழைத்துசென்று அனைவரும் இணைந்து ஜெபித்தார். தொடர்ந்து 5 நாட்கள் உபவாசித்து மன்றாடினபோது பரிபூரண விடுதலையை கர்த்தர் கட்டளையிட்டார். இப்போது குடும்பமாய் சபைக்கு செல்கிறோம்.தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**Pr. தல்லு கராசியா** — சரக்கானி

சுக்ரம் என்ற சகோதரனின் மகன் திருமணத்தை தேவன் நேர்த்தியாய், எல்லா தேவைகளையும் சந்தித்து நடத்திக் கொடுத்தார்.

**Pr. புரலால் ரானா** — வாக்னெர் பாபோ

வாக்ஜி என்ற சகோதரன் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் மிகவும் கஷ்டப்பட்டார். இவருக்காக இயேசுவினிடத்தில் மன்றாடினபோது அற்புத சுகம் கிடைத்தது.

போனி என்ற சகோதரி சரீர எரிச்சலினால் மிகவும் வேதனைப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகம் கொடுத்தார்.

# 25வது ஆண்டு ஸ்தோத்திர அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் நமது ஷாலோம் ஊழியத்தில் 25 வருடங்களை நிறைவு செய்ய தேவன் தயைபாராட்டினார். ஷாலோம் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டதினமான **ஜுலை 1**ம் தேதியன்று விசேஷ ஸ்தோத்திரக்கூடுகை நடைபெற்றது. இக்கூடுகையில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களிலுள்ள மூத்த சுதேசஊழியர்கள், பணித்தள அலுவலர்கள் மற்றும் Project Staff சுமார் 150 பேர் குடும்பமாக கலந்துக்கொண்டனர். கடந்த 25 வருடங்கள் தேவன் செய்த மகத்தான கிரியைகளை நினைத்து அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள். குறிப்பாக ஆரம்பநாட்களின் ஊழியங்களைப் பற்றி, எப்படி ஷாலோம் ஊழியத்தைத் தேவன் கொடுத்தார், ஆரம்ப காலங்களில் கடந்து வந்த பாதைகளில் ஏற்பட்ட கஷ்டங்கள், பாடுகள், அதன் மத்தியில் தேவனுடையகரம் எப்படி அதிசயமாய் வழிநடத்தியது? ஒன்றுமில்லாமையிலிருந்து தேவன் உருவாக்கியவிதத்தை அவருடைய நாம மகிமைக்காக **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பகிர்ந்துகொண்டபோது அனைவரும் கண்ணீரோடு அற்புத தேவன் நிகழ்த்திய அதிசயங்களை எண்ணி உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிபலிகளை ஏறெடுத்தார்கள்.

மேலும் குஜராத், ம.பி, இராஜஸ்தான் மாநிலத்திலிருந்தும் ஒரு மூத்த சுதேச ஊழியர்கள் (போதகர்) தங்களின் அனுபவசாட்சிகளைப் பகிர்ந்துகொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள். அதைத் தொடர்ந்து **பேராயர். தேவதாஸ்** அவர்கள் வாக்குத்தத்தசெய்தியை வழங்கினார்கள். மேலும் தேவன் தந்த வெள்ளிவிழா ஆண்டின் திட்டமாகிய அனைத்து ஊழியர்களும் ஒரு புதிய ஊழியரைக் கொண்டு வரவேண்டும். அனைத்து விசுவாசக் குடும்பங்களும் 3 புதிய குடும்பங்களை சபைக்கு அழைத்துவரவேண்டும் என்பதை பாரத்துடன் பகிர்ந்துகொண்டபோது, அனைவரும் தேவன் தந்ததிட்டத்திற்கு தங்களைக் குடும்பமாக அர்ப்பணித்தார்க்ள.

அதேப்போன்று **ஜுலை 2ம்** தேத் குஜராத் சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்கும், **ஜுலை 4ம்** தேதி மத்தியப்பிரதேச சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்கும், **ஜுலை 5ம்** தேதி இராஜஸ்தான் 1 சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்கும், **ஜுலை 6ம்** தேதி இராஜஸ்தான் 2 சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்கும், விசேஷ வெள்ளிவிழாநிறைவு ஆண்டின் ஸ்தோத்திரக் கூடுகை நடைபெற்றது. இந்தக் கூடுகைகளில் சிறப்பு துதி ஆராதனையை நடத்தும்படியாக பூனாவிலிருந்து போதகர், சன்னிவிஷ்வாஸ் மற்றும் போதகர். விஜய் அவர்கள் வருகைதந்து சிறப்பாக நடத்தித் தந்தார்கள். ஊழியர்கள் குடும்பமாக நன்றியுள்ள இருதயத்தோடு தேவனை ஆடிப்பாடி துதித்தார்கள். ஆராதனைவேளையில் கர்த்தருடைய பிரசன்னம் அளவில்லாமல் இறங்கிவந்தது. தொடர்ந்து பேராயர். தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்கு ஷாலோம் பக்திமண்டலி (குஜராத்),

ஷாலோம் சலியாசமமிதது (ம.பி), ஷாலோம் சாநதி சனஸ்தான மாஜஸ்தான) ஆசியவற்றின் சார்பில் நினைவுபரிசு வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து குஜராத்தில் இருந்து 2 ஊழியர்கள், ம.பி-ல் இருந்து 2 ஊழியர்கள், இராஜஸ்தான் சார்பில் 4 ஊழியர்கள் தங்கள் இரட்சிப்பின் அனுபவத்தை சாட்சியாய் பகிர்ந்துகொண்டார்கள்.

அதைத் தொடர்ந்து **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் ஷாலோம் ஊழியம் குறித்து பகிர்ந்து கொண்ட போது, அனைவரும் கடந்த நாட்களில் தேவன் செய்த அதிசயங்களை நினைத்து கண்ணீரோடு நன்றி செலுத்தி ஸ்தோத்திர ஜெபத்தை ஏறெடுத்தார்கள். அதன் பின் ஷாலோம் ஊழியத்தில் 25 வருடங்கள் தேவன் செய்த காரியங்களை ஒரு வீடியோ தொகுப்பாக. L.C.D. Projector மூலம் திரையிட்டு காண்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து **பேராயர். தேவதாஸ்** அவர்கள் வாக்குத்தத்த செய்தியையும் தேவன் தந்த வெள்ளிவிழா திட்டத்தைக் குறித்து, பரிசுத்த ஆவியானவருடைய வழி நடத்துதலின்படி பகிர்ந்துகொண்டபோது, அனைவரும் அந்த திட்டத்திற்கு தங்களையும், தங்கள் குடும்பத்தையும், சபையையும் அர்ப்பணித்தார்கள். மேலும் இந்ததிட்டங்கள் நிறைவேறதாங்கள் சபையாக உதாரத்துவமாக கொடுப்போம் என்று வாக்குகொடுத்தார்கள். ஜெப வேளையில் ஆவியானவர் பலமாய் இறங்கினார். அனைவரும் புதிய வல்லமை மற்றும் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டார்கள். கூட்ட இறுதியில் திருவிருந்து ஆராதனையைப் **பேராயர். தேவதாஸ்** அவர்கள் நடத்தினார்கள். அனைவரும் கிறிஸ்துவின் பாடுகளையும் அவருடைய அன்பையும் எண்ணி, பயபக்தியுடன் பங்குபெற்றனர். **பேராயர். தேவதாஸ்** அவர்கள் ஜெபித்து ஆசீர்வாதம் கூற, கூட்டங்கள் இனிதே நிறைவுபெற்றது. இக்கூட்டங்களில் கலந்துகொண்ட அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. அனைவரும் மகிழ்ச்சியுடன் தங்கள் பணித்தளங்களுக்கு கடந்து சென்றனர். தேவனுக்கே மகிமை!

| 25ஆம் ஆண்டு தரிசன திட்டப்பணிகள் | |
|---|---|
| ❖ 1000 பீல் சுதேச ஊழியர்களை உருவாக்குதல் | ❖ விசுவாசிகளுக்கு சீஷத்துவ முகாம் நடத்துதல் |
| ❖ 1000 கிராம ஆராதனை குழுக்கள் | ❖ சபை மூப்பர்களுக்கு அபிஷேகக் கூட்டங்கள் |
| ❖ 1000 கிராம ஆலயங்கள் | ❖ சிறுவர் வேதாகமப் பள்ளி, ஞாயிறு பள்ளி |
| ❖ கிராமங்கள் தோறும் நற்செய்திக் கூட்டங்களை நடத்தி நற்செய்தியை அறிவித்தல் | ❖ பெண்களுக்கு சிறப்புக் கூட்டங்கள் |
| ❖ 10 இலட்சம் ஆத்துமாக்களைச் சந்தித்தல் | ❖ 5000 ஆதிவாசி சிறுவர்களுக்குகள் கல்வி & பராமரிப்பு |
| ❖ 7 அயிரம் மூப்பர்களுக்கு பயிற்சியளித்தல் | ❖ பீல் மக்கள் மத்தியில் சமூதாய நலத்திட்டங்கள் மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்துதல் |
| ❖ 1 இலட்சம் வாலிபர்களைச் சந்தித்தல் | ❖ ஆரம்ப சுகாதாரப் பயிற்சி முகாம்களை நடத்ததல் |
| ❖ சுமார் 50,000 விசுவாசிகளுக்கு வேதாகமங்கள் | ❖ 50 ஆதிவாசி மாணவர் விடுதிகளைக் கட்டுதல் மற்றும் பல |

ஜெபிப்போம்! செயல்படுவோம்!!

# 25வது நிறைவு ஆண்டு ஸ்தோத்திரக் கூட்டங்கள் ஜூலை 1-7



பிஷப் தேவதாஸ் தேவ வார்த்தையின்போது....



சகோதரி. வஹிதா தேவதாஸ் செய்தியின்போது....



நினைவு பரிசு வழங்குதல் - இராஜஸ்தான்


நினைவு பரிசு வழங்குதல் - ம.பி.



பாஸ்டர். கண்ணுபாபோர் சாட்சி.....


பாஸ்டர். ராலுசிங் ஹத்திலால் சாட்சி.....


திருவிருந்து ஆராதனை


எக்காளதொனியோடு ஆராதனை...

## ஷாலோம் சுதேச ஊழியர் சாட்சி



என் பெயர் துல்ஜி நினாமா. நான் இராஜஸ்தான் பான்ஸ்வாடா மாவட்டத்திலுள்ள காளி சாபேரா என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஒரு பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவன். எனக்கு தாய், தகப்பன் இல்லை. எனது குடும்பத்தில் மொத்தம் 5 பேர். நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு சிறுவயதிலிருந்தே வேலை செய்து குடும்பத்தை நடத்தி வந்தோம்.

என் இஷ்டப்படி பாவ வாழ்க்கையில் வாழ்ந்து வந்தேன். பீடி, சிகரெட், தம்பாக்கு குடிப்பழக்கம் என்று எல்லா கெட்ட காரியங்களில் ஈடுபட்டு வந்தேன். என் சகோதரனுடன் நான் சண்டையிட்டு வீட்டிலிருந்து வெளியே வந்துவிட்டேன். கிராமத்தை சுற்றி அலைந்து திரிந்தேன். இந்நிலையில் எனது கிராமத்தில் ஷாலோம் ஊழியர் வால்சிங் நினாமா என்னிடம் இயேசுவைக் குறித்து அறிவித்து வேதத்தை வாசிக்கக் கொடுத்தார். நான் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன்.

விசுவாசியாக இருந்த வேளையில் தேவன் என்னை அவருடைய ஊழியத்தை செய்ய அழைத்தார். அதன் பிறகு ஷாலோமில் இணைந்து குறுகிய கால வேதாகம பயிற்சி பெற்று சொந்தக் கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன். எனது கிராமத்தைச் சுற்றியுள்ள கிராமத்தில் இயேசுவை அறிவித்து அங்கு ஆலயம் கட்டி ஊழியரை எழுப்பவேண்டும்.

மேலும் பாவத்திலும் சாபத்திலும் அந்தகாரத்திலும் வாழ்கிற பீல் மக்கள் அனைவரும் தேவனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே எனது தரிசனம்.

**இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர்**
**LIVING SPRING CHURCH, (Pr. Jabez. P) NAGERCOIL**

சகோ. துல்ஜி நினாமா அவர்களை 10.7.2016 அன்று நாகர்கோவில்
ஜீவ ஊற்று சபையில் வைத்து பிரதிஷ்டை பண்ண தேவன் கிருபை செய்தார்
ஊழியரை தாங்கிவருகிற போதகர். ஜெபஸ் அவர்களுக்கு நன்றி கூறுகிறோம்.






மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை (10.07.2016)

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 600க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 700க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இன்னும் 400 புதிய சதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ.2500/- ஜெபித்து கொடுத்துத் தாங்க முன்வாருங்கள்.

## 10 பீல் சுதேச ஊழியர்கள் பிரதிஷ்டை ஆராதனை (8.7.2016)

## Green City Bible Church, Gandhinagar

குஜராத் மாநில தலைநகர், காந்தி நகரில் 08.07.2016 அன்று **கிரீன் சிட்டி பைபிள் ஆலயத்தின் 9 வருட நிறைவு விழாவை** முன்னிட்டு 20 மிஷனெரிகள் பிரதிஷ்டை நடைபெற்றது. இதில் 10 ஷாலோம் பீல் ஊழியர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இந்த ஆராதனையில் நம்முடைய பீல் ஊழியர்கள் சிறப்பு பாடல் பாடினார்கள். **பேராயர் தேவதாஸ்** அவர்கள் ஷாலோம் ஷாலோம் ஊழிய பகிர்வு சாட்சியை பகிர்ந்துக் கொண்டார்கள். அதைத் தொடர்ந்து மிஷனெரி பிரதிஷ்டை ஜெபத்தை ஏறெடுத்தார்கள்.

**சகோ. பேட்ரிக் ஜோஷ்வா** (N.P.N.) சிறப்பு செய்தி கொடுத்தார்கள். இந்த ஆராதனையை நேர்த்தியாக மிக சிறப்பாக நடத்தி 10 ஷாலோம் சுதேச ஊழியர்களை தாங்க முன்வந்த அன்பு போதகர், **Pr.சாம் ஜோசுவா** மற்றும் சபை மூப்பர்கள், குறிப்பாக **சகோ. ஜெகதீச பாண்டியன் I.A.S., சகோ. கிஷோர்ராவ் I.A.S.,** அவர்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

இந்த மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனையில் பேராயர் குடும்பத்திற்காக சிறப்பு பிரார்த்தனையை குஜராத் டயோசீஸ் **CNI Bishop. Silvans Christian** அவர்கள் ஏறெடுத்தார்கள், அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



ஊழிய அறிமுகம் சாட்சி



மிஷனெரி பிரதிஷ்டை ஜெபம்


பேராயர் குடும்பத்திற்காக ஜெபம்


சகோ. ஜெகதீச பாண்டியன் அவர்கள் பேராயர் குடும்பத்தை வாழ்த்துதல்....

## சகோ. ஜெபசிங் சந்தோஷம், சகோ.ஜெபராஜ் பணித்தளவருகை (17,18,19 ஜுன்)





உற்சாகமான பீல் ஆதிவாசி மக்களின் கலாச்சார வரவேற்பு





சகோ. ஜெபசிங் சந்தோஷம் பகிர்வுவேளை

## ஊழிய தலைவர்கள் பயிற்சிகூட்டங்கள் 12,13 ஜுலை 2016



பேராயர் தேவதாஸ் அவர்களின் பகர்வு



டாக்டர் ஏபெல் பயிற்சி கொடுக்கும்போது



ஆலோசனை பகிர்வுநேரம்



வீடியோ மூலமாக பயிற்சி அளிக்கப்படுகிறது

# ஜெபசிங் சந்தோஷம், சகோ. ஜெயராஜ் பணித்தள அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் சத்தியமங்கலத்திலிருந்து சகோ. ஜெபசிங் சந்தோஷம், சகோ. ஜெயராஜ் இருவரும் ஜூன் 16ம் தேதி இரவு குஜராத்திலுள்ள ஷாலோம் பணித்தளம் அமைந்துள்ள தாகோத் பணித்தளத்திற்கு கடந்து வந்தோம்.

ஜூன் 17ம் தேதி வெள்ளிக்கிழமை காலை ஷாலோம் அலுவலகம் சென்றோம். அங்கிருந்து சகோ. சாமுவேல் அவர்கள் எங்களை மத்தியப்பிரதேசத்திலுள்ள வால்புறா என்ற இடத்திலுள்ள ஷாலோம் கிளை சபைக்கு அழைத்துச் சென்றார். அங்கு நடைபெற்ற உபவாச ஜெபத்தில் நாங்கள் கலந்துக் கொண்டோம். அங்கு சகோ. ஜெபசிங் சந்தோஷம் அவர்கள் தேவசெய்தியளிக்கவும், ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார்.

இந்த சபைக்கு நாங்கள் சென்ற போது பாம்பு கடித்த 12 வயதுள்ள சிறுமிக்கு, சபை போதகர் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் ஜெபித்து, 7 நாட்களாகியும் சபையிலே ஜீவனோடு இருக்கும் ஜீவனுள்ள சாட்சியை நேரில் கண்டபோது அப்போஸ்தலர் நாட்களில் நடைபெற்ற அற்புத அடையாளங்கள் இப்போதும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் நடைபெற்று வருவதை கண்கூடாக காண தேவன் கிருபை செய்தார்.

ஜூன் 18ம் தேதி சனிக்கிழமை தாகோத் பணித்தள அலுவலகத்தில் நடைபெற்ற காலை தியானத்தில் பங்கு பெற்றோம். சகோ. ஜெபசிங் சந்தோஷம் அவர்கள் ஊழியர்கள் உண்மையும், உத்தமுமாய் ஊழியம் செய்வதைக் குறித்து செய்தி வேளையில் ஆண்டவருடைய வார்த்தைகளை பகிர்ந்துக் கொண்டார். அனைவருக்கும் ஆசீர்வாதமாய் இருந்தது.

பின்பு கொய்கா என்ற இடத்திலுள்ள ஷாலோம் பேராலயத்தில் 200க்கும் மேற்பட்ட மூப்பர்கள் கூடுகையில் நாங்களும் பங்கு பெற்று தேவ ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள தேவன் கிருபை அளித்தார். சகோ. ஜெபசிங் சந்தோஷம் அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை பகிர்ந்துக் கொண்டார்கள்.

பிட்டோல் கிராமத்திலுள்ள 2 அடுக்கு மாடி கட்டிடத்தில் நடைபெறும் ஷாலோம் கிளை சபையை கண்டு மனம் மகிழ்ந்தோம். சபை போதகர் மூலமாக கேட்ட செய்தி, இந்த சபைக்கு வரும் முடவர்கள் மற்றும் வியாதியஸ்தர்கள் இயேசுவின் நாமத்தினால் சுகம் பெற்று விடுதலையடைகின்றனர் என்ற தேவ நாமத்திற்கு மகிமை உண்டாவதாக.

ஜூன் 19ம் தேதி ஞாயிற்றுக்கிழமை குஜராத்திலுள்ள ஓஸ்கா என்ற ஆலயத்தில் நடைபெற்ற ஓய்வு நாள் ஆராதனையில் பங்கு பெறவும், சகோ. ஜெபசிங் சந்தோஷம் அவர்கள் செய்தியளிக்கவும் தேவன் கிருபையளித்தார். இந்த மூன்று நாட்களும் தேவனுடைய சித்தத்தின்படி எங்களை பணித்தளத்திற்கு அழைத்துச் சென்ற தேவனுக்கு நன்றியை ஏறெடுக்கிறேன்.

இதை வாசிக்கின்ற அன்பான தேவ ஜனங்களே நீங்களும் குடும்பமாகவோ, சபையாகவோ, பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் சுதேச ஊழியர்களை தாங்கவும், ஆலயங்களைக் கட்டி எழுப்பவும், பீல் மாணவர்களை தாங்கவும் முன்வாருங்கள். தேவன் தாமே ஷாலோம் மிஷனெரிப் பணியையும், ஊழியத்தையும் மென்மேலும் ஆசீர்வதிப்பாராக!

# பாடல் பிறந்த கதை -சகோ. J. அற்புதராஜ் மர்காஷிஸ்

**இந்தியா நம் தாயகம்**... அதன் சிறப்பு அம்சங்கள் நமக்கு தெரிந்தவைகளே. எல்லா வளமும் ஒருங்கே பெற்ற ஒரே நாடு நம் இந்தியா. இயற்கை வளம், ஆன்மீக வளம் நிறைந்தது நம் நாடு. நாம் இந்தியாவின் குடிமக்கள் என்பதிலே பெருமிதம் கொள்வோம். நம் நாட்டு மக்கள் மிகவும் சிறந்தவர்கள். கடவுள் பக்தியுள்ளவர்கள். அவர்களை எளிதில் ஏமாற்ற முடியாது. ஆனால் இயேசுவின் நற்செய்தி அவர்களை ஆட்கொள்ளும் போது எளிதில் இயேசுவின் அடியார்களாய் மாறி விடுவர். கடவுளே இல்லை என்று அடித்து சொல்லும் ஒருவர் கூட இங்கில்லை. இயேசு கடவுள் என்று அங்கிகரிக்க தயங்காதவர்கள் நம் மக்கள்.

பவுல் அப்போஸ்தலன் அகரிப்பா ராஜாவை பார்த்து நான் அந்த பரமதரிசனத்துக்கு கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை என்று உறுதியாய் சொன்னது போல கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம் ஒவ்வொருவருக்கும் ஒரு தரிசனம் வேண்டும். இந்தியாவின் 69வது விடுதலை நாளை நினைவுகூறுகின்ற நாம் அனைவரும் இந்தியர் அனைவரும் ஆன்மீக விடுதலை பெறவேண்டும் என்ற தெய்வ தரிசனத்தோடு செயல்பட கிறிஸ்து இயேசு நம்மை இன்று அழைக்கிறார். அநேக வருடங்களுக்கு முன் தேவன் தந்த தரிசனப்பாடல் இதோ.

"**தரிசனம் தந்தவர் தயவுடன் உந்தனை தரணியில் புகழ்பாட அழைக்கின்றாரே**
**தன் நிகரில்லா இயேசுவின் நாமம் தயங்காது கூறிட எழுந்து வா**"

நமது நாட்டில் 1008 கோடி கடவுள்களை வணங்கும் மதவழிபாடுகள் இருப்பதும், பல வேற்றுமையான கொள்கைகள், பழக்கங்கள், இருப்பதும் உண்மை தான். ஆனால் இந்தியா என்று சொன்னாலே வேற்றுமையில் ஒற்றுமை. ஆகவே வேற்றுமையை களைந்து ஒற்றுமையுடன் வாழும் பழக்கம் இந்தியர்களுக்கே உண்டு. இவ்வளவு சாதகமான காரியங்கள் நமக்கு உண்டு. நாம் எல்லாரும் எழுந்து புறப்பட்டு இயேசுவின் நாமத்தை ஒருங்கே அறிவித்து இறைப்பணியை உண்மையுடன் நிறைவேற்றினால் இந்தியாவை இயேசுவுக்கு சொந்தமாக்க நம்மால் முடியும். தன்னலம் என்ற சுயநலமென்னும் இரும்பு கோட்டைக்குள் நம் சபைகள் சிக்கித் தவிக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் தான் என் உள்ளத்தில் எழுந்த பாடலின் சில வரிகளை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

"**குறுகிய வட்டத்தில் கூனிப்போன உன்னை போட்டி பொறாமைகள் வாட்டியதோ**
**பரந்த நம் தாயகம் எதிர்நோக்கி இருகரம் நீட்டியே அழைக்கின்றதே.**"

இயேசுவின் நற்செய்தியை உண்மையான அனுபவத்தோடு அறிவிக்கும் எவர்க்கும் ஆத்துமாக்கள் வேட்டையாடுதல் ஒரு இன்ப அனுபவமாக விளங்கும்.

தம் சொந்த வீட்டையும், சபையையுமே நினைத்து வருந்துபவர்கள் வறண்ட நிலத்தைதான் காண்பார்கள். சற்று தூரமாய் வீட்டிற்கும், சபைக்கும் அப்பால் ஏறிட்டு பார்த்தால் ஆத்துமாக்கள் நிறைந்த விளைந்த நிலத்தை நிச்சயமாக பார்ப்போம்.

**"அருகினில் பார்த்தால் வறட்சிதான் தோன்றும் தூரத்தில் பார்த்தால் விளைநிலம் தோன்றும்**
**தூரதரிசனம் நாம் பெற வேண்டும் துரிதமாய் அருட்பணி செய்திட வேண்டும்"**

அப்படியொரு தூரதரிசனம் கொண்டால் நாம் சோம்பேறியாக அல்ல ஆமையைப் போல் நகர்ந்து செல்கிறவர்களாயல்லாமல் வீரியமுள்ள குதிரை போல் சீறிப் பாய்ந்து ஆண்டவரின் அருட்பணி நிறைவேற்றுவோம். கர்த்தரின் ஒத்தாசையால் என்ன பெலவீனம் இருந்தாலும், வயது சென்று மூப்படைந்தாலும் அன்பரின் பணியை விடாது ஓய்வின்றி செய்வோம். நாம் கர்த்தரின் ஊழியத்தில் எந்தவிதத்திலும் பிந்திபோகாதவர்களாக ஏற்றகாலத்தில் விதைத்து கெம்பீரமாய் அறுவடைசெய்து இயேசுவின் மந்தையை பலுகி பெருகப் பண்ணுவோம்.

யாக்கோபு 5:20 வசனத்தின்படி புண்ணியம் செய்தவர்கள் ஆவோம். ஒவ்வொரு நாளும் கோடிக்கணக்கான ஆத்துமாக்கள் நரகக்குழி நோக்கி செல்கின்றனர். அவர்களை தடுத்து நிறுத்திட நம்மில் யார் உண்டு. டோனாவூரில் ஏழை அநாதி பிள்ளைகளுக்கு இல்லம் அமைத்த **எமி கார்மைக்கேல் அம்மையார்** ஒருநாள் தன் கனவில் கோடிக்கணக்கான மக்கள் நரகம் நோக்கி வருவதைப் பார்த்தார்கள். இயேசுவின் கட்டளை பெற்று அம்மையாரை சுமந்து சென்ற தூதர்களைப் பார்த்து தன்னை விட்டுவிடும்படி அம்மையார் கூறினார்கள். ஆனால் அவர்கள் விட்டு விடுவதாக இல்லை. அம்மையார் அவர்களை தடுத்து நிறுத்தி நரகக்குழியில் வாயிலில் கீழே விழுந்தார்கள். அவர்கள் இரண்டு கரங்களையும் விரித்து நரகவாயிலில் நின்று கத்தினார்கள். "It is fire, It is fire. Don't go there" அங்கே நெருப்பு தயவு செய்து யாரும் அங்கே போகாதிருங்கள் என்று. அத்துடன் அவர்கள் கனவு கலைந்து விட்டது. அந்த நாளிலிருந்து கார்மைக்கேல் அம்மையாருக்கு நரகத்தில் ஓசை தன் காதுகளில் கேட்டுக் கொண்டேயிருந்தது. அவர்கள் கண்ட காட்சி கண்ணுக்கு முன்னே அடிக்கடி வந்தது. ஆதலால் கண்ணீரோடு வேத வசனத்தை விதைத்தார்கள், கெம்பீரத்தோடே ஆத்துமாக்களை அறுவடை செய்தார்கள். இந்த சம்பவத்தை ஒரு புஸ்தகத்தில் வாசித்த நான் இந்த கவியை தரிசனப் பாடலுடன் சேர்க்கத் தீர்மானித்தேன்.

**"ஆவியின் செழிப்பிலே களித்திராதே – நீயும் வரங்களின் திருப்தியால் மயங்கிடாதே**
**தீக்கடல் நோக்கியே விரைந்திடும் கூட்டத்தை தீவிரம் சென்று நாம் தடுத்திட வேண்டும்"**

இந்தியாவில் உள்ள ஆத்துமாக்கள் விலையேறப் பெற்றவர்கள். அதனால்தான் வடஇந்தியாவில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களிலுள்ள 1 கோடி பீல் மக்களை கிறிஸ்துவண்டை நடத்த ஷாலோம் ஊழியத்தின் மூலம் இயேசுவின் ஆவியால் பிரயாசப்பட்டு வருகின்றோம். இந்த ஊழியத்திற்காக ஜெபிப்பவர்கள், ஆதரவு கொடுப்பவர்கள் இயேசுவின் மகிழ்ச்சிக்கு காரணமாயிருந்து அவரது நிறைவான பாராட்டை பெறுவர். ஆகையால் இந்த பாடலின் இறுதிக் கவிபோல

**"வீட்டிற்கு ஒருவரை அனுப்பிட வேண்டும் நாட்டிற்கு இயேசுவைத் தந்திட வேண்டும்**
**படையெனத் திரளாக புறப்பட வேண்டும் தடையின்றி இயேசு ராஜ்ஜியம் படைத்திட வேண்டும்"**

இயேசு நாமம் வாழ்க, இந்திய மக்கள் வாழ்க. இந்தியாவின் ஆன்மீக விடுதலைக்காக போராடுவோம், வெற்றி பெறுவோம். இயேசுவுக்கே மகிமை.

# இந்தியாவின் முதல் பிராட்டஸ்டண்ட் மிஷனெரி

## பர்த்தலமேயு சீகன்பால்க்



தெற்கு ஆசியாவிலே முதல் முதலாவதாக மொழிபெயர்க்கப்பட்ட அச்சிடப்பட்ட வேதாகமம் தமிழ் வேதாகமமே. இச்சிறப்பைத் தமிழ் மொழிக்கு அளித்தவர் சீகன்பால்க் என்னும் ஜெர்மன் நாட்டவர்.

இவரது தாயார் கத்ரினா தான் சாகும் முன் தனது பிள்ளைகளை அழைத்து இவ்வுலகில் உங்களைத் தனியாக விட்டுச் செல்லும் நான் உங்களுக்கு மிகப்பெரிய செல்வம் ஒன்றைத் தருகிறேன். அதை என் வேதபுத்தகத்திலே கண்டடைவீர்கள். அதன் ஒவ்வொரு பக்கத்தையும் என் கண்ணீரால் நனைத்திருக்கிறேன் என்றார். அப்போது சீகன்பால்குக்கு வயது ஆறு. இரு ஆண்டுகளுக்குப் பின் தந்தையும் மரணமடைந்தார்.

டென்மார்கு அரசர் நான்காம் பிரெட்ரிக் சீகன்பால்கையும் அவரது நண்பர் புளுட்சோவையும் நற்செய்திப் பணி செய்ய தரங்கை அனுப்பினார். இவ்விருவரும் 1706-ஆம் ஆண்டு ஜூலை 9ம் தேதி டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனி ஆதிக்கத்தின் கீழிருந்த தரங்கம்பாடி வந்தனர். வந்தது முதல் மரணம் மட்டும் பலவித பாடுகளுக்கும் இன்னல்களுக்கும் உள்ளானார். கடவுளைப் பற்றி எல்லா சித்தாந்தங்களையும் அறிந்திருக்கிறேன் என்பது மட்டும் போதாது. கடவுளுக்கும் எனக்கும் சரியான தொடர்பு உள்ளது என்பதையே மதிக்கிறேன் என்ற கொள்கையுடைய கிறிஸ்தவ பக்தி இயக்கத்தைச் சார்ந்தவர் சீகன்பால்கு.

1708 அக்டோபர் 17-ஆம் தேதி ஊக்கமான இறைவேண்டுதலுடன் புதிய ஏற்பாட்டை மொழி மாற்றம் செய்யத்துவங்கினார். 1711 மார்ச் மாதம் 31-ஆம் தேதி புதிய ஏற்பாட்டை மொழி பெயர்த்து முடித்தார். நியாயமற்ற குற்றச்சாட்டுகளின் பொருட்டு 128 நாட்கள் சிறையிலிருந்தார். இறைமக்களின் உதவியால் தரங்கையில் அச்சுக்கூடம் நிறுவப்பட்டது. தரங்கையருகேயுள்ள கடுதாசி பட்டறை என்னும் ஊரில் காகிதம் தயாரிக்கப்பட்டது. சிறுவருக்கானப் பள்ளிகள், விடுதிகள் நிறுவினார். தமிழ் மக்களுக்காக புதிய எருசலேம் என்னும் பெரிய ஆலயத்தைக் கட்டினார். 1719-ஆம் ஆண்டு பிப்ரவரி 23-ஆம் தேதியில் தனது 37-ஆம் வயதில் தரங்கையில் ஆண்டவருக்குள் மரணமடைந்தார். இவர் நிறைவு செய்யாமல் விட்டிருந்த பழைய ஏற்பாட்டின் மொழி மாற்றத்தை பெஞ்சமின் சூல்சே செய்தார். 1728-ல் முழு வேதாகமம் வெளியிடப்பட்டது.

சீகன்பால்கு வேதாகமத்தை பாமர மக்களின் தேவைக்காக அன்னாரின் பேச்சுத் தமிழிலே மொழி மாற்றம் செய்தார். இதைக்கொண்டு சீகன்பால்குக்கு செந்தமிழ் அறிவே கிடையாது என்றவருமிருந்தனர். ஏறத்தாழ 40 ஆண்டுகளாக இவரது மொழி பெயர்ப்பே தமிழருக்கு வேதாகமமாக இருந்தது.

# பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதப்புத்தகங்கள்





**கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று – அப். 13:49.**

கைகளில் வில் அம்புகளை வைத்துக்கொண்டு திருடியும், கொள்ளையடித்தும் சாராயத்தைக் காய்ச்சி குடித்தும் கொண்டிருந்த பீல் மக்கள். மந்திரப் பூஜைகள் செய்து பிசாசின் பிடியிலும், அந்தகாரத்திலும் வாழ்ந்து வந்த பீல் மக்கள் மத்தியில் ஷாலோம் தரிசனப் பணிகளை தேவன் கொண்டு வந்தது மட்டுமல்ல, மகத்துவமான காரியங்களையும் செய்திருக்கிறார்.

கடந்த 24 ஆண்டுகளில் 580 பீல் சுதேச ஊழியர்களை எழுப்பவும் அவர்கள் மூலமாக 660 க்கும் மேற்பட்ட சபைகளை உருவாக்கவும் தேவன் கிருபை தந்துள்ளார். பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள்.

ஒவ்வொரு கிராம விசுவாசிகள் எங்களிடம் இந்த கறுப்புக் கலர் புத்தகம் என்னவென்று ஆவலாய் கேட்பார்கள். மேலும் எங்களுக்கு ஒன்று தாருங்கள் என கேட்டு வேதாகமத்தை வாங்கி பயபக்தியுடன் அரவணைத்து வைத்துக் கொள்வார்கள். அவர்களுக்கு இலவசமாக வேதாகமத்தைக் கொடுக்காமல் குறைந்த விலையாக ரூ. 50/-க்குக் கொடுத்து வருகிறோம்.

கடந்த ஆண்டு 6,000 க்கும் மேலானவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். அந்த விசுவாசக் குடும்பத்தார் ஆவலுடன் வேதப்புத்தகத்தைக் கேட்கவே அவர்களுக்கு வேதப்புத்தகம் வழங்கப்பட அநேகச் சபைகள் மற்றும் தேவப்பிள்ளைகளிடம் அறிவிப்பு கொடுத்தோம். கடந்த வருடம் தேவக்கிருபையினால் சுமார் 4,000 வேதப்புத்தகங்களை வாங்கி மிகக் குறைந்த விலையில் வழங்க தேவன் கிருபைத் தந்தார்.



இவ்வருடம் 25,000 வேதப்புத்தகங்கள் குஜராத்தி, ஹிந்தி மொழியில் வழங்கப்பட வேண்டும். ஒரு வேதப் புத்தகத்திற்கு ரூ. 150/- வீதம் 25,000 வேதப்புத்தகங்களுக்கு நிதி உதவி செய்ய ஆதரவாளர்கள் தேவை. கிராமங்களில் வாழும் பீல் ஆதிவாசி மக்களுக்கு வேதப்புத்தகம் வழங்க தேவ ஜனங்களாக, குடும்பமாக, சபையாக முன் வாருங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

# ஜெபகுறிப்புகள்....

## இந்திய தேசத்துக்கான ஜெபகுறிப்புகள்....




1. மக்களவை மற்றும் மாநிலங்களவையின் தலைவர்கள், உறுப்பினர்கள், எதிர்கட்சித் தலைவர்களுக்கு வேண்டிய தேவ ஞானம், ஒத்தாசை, வழிநடத்துதல் கிடைக்க ஜெபிப்போம்.

2. தங்களை அதிகாரத்தில் வைத்திருப்பவர் தேவனே என்ற எண்ணம் அவர்கள் மனதில் நிலைத்திருக்கவும், மக்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை நீதிநேர்மையுடன் நிறைவேற்றவும் ஜெபிப்போம்.

3. இவர்களின் இரட்சிப்பிற்காக, பாதுகாப்பிற்காக, ஜெபிப்போம்.

4. பாராளுமன்றத்தில் வருடந்தோறும் பிப்ரவரி முதல் மே வரையில் 20 முதல் 35 நாட்கள் நடைபெறும் பட்ஜெட் கூட்டத் தொடருக்காகவும், ஜீலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் 20 முதல் 35 நாட்கள் நடைபெறும் மழைக்கால தொடருக்காகவும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் 20 முதல் 34 நாட்கள் நடைபெறும் குளிர்கால கூட்டத் தொடருக்காகவும் கருத்தாய் ஜெபிப்போம்.

5. இந்த 3 விதமான பாராளுமன்ற கூட்டத் தொடர்களில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவருக்கும் தேவ ஆலோசனை வெளிப்படவும், தேசத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கேதுவான சரியான, நியாயமான தீர்மானங்களை எடுக்கவும் ஜெபிப்போம்.

6. சிறுபான்மை மக்கள் மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நன்மை பயக்கும் அநேக திட்டங்களை நிறைவேற்ற ஜெபிப்போம்.

7. எதிர்கட்சியினர் பாராளுமன்றத்தில் வெளிநடப்பு செய்து மக்களின் பணத்தை வீணாக்காதவாறும், பொறுப்புணர்வோடு நடந்துகொள்ளவும் ஜெபிப்போம்.

"உன்னதமானவராகிய கர்த்தர் பயங்கரமானவரும், பூமியின் மீதெங்கும் மகத்துவமான இராஜாவுமாயிருக்கிறார்". சங்கீதம் : 47:2

## இந்திய மாநிலத்துக்கான ஜெபகுறிப்புகள்....

1. மதமாற்ற தடைச்சட்டம் அமுல் உள்ள மாநிலங்களில் தேவன் ஆட்சியாளர்களோடு இடைபட்டு அவைகளை வாபஸ் பெற வேண்டுமென்று ஜெபிப்போம்.

2. மதச்சார்பற்ற, நடுநிலையான, நேர்மையான, ஸ்திரமான, அரசாங்கங்களை தேவன் மாநிலங்கள் தோறும் அமைத்துத் தர வேண்டி ஜெபிப்போம்.

3. முதலமைச்சர், மாநிலத்துறை அமைச்சர்கள் மற்றும் சட்டசபை உறுப்பினர்கள், மக்கள் நலம் கருதி பணி செய்யவும், இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரைப் போல நன்மை செய்கிறவர்களாய் காணப்படவும் ஜெபிப்போம்.

4. அனைத்து மாநில தலைநகரங்களிலும், திருச்சபைகளும், ஊழியங்களும் பெருக வேண்டுமென்று ஜெபிப்போம்.

5. அனைத்து மாநிலங்களிலும் சமாதானம் நிலவ, வறுமை ஒழிய, சாதி, சமய பேதங்கள் ஒழிய வேண்டுமென்று ஜெபிப்போம்.

6. மாநிலங்களுக்கு இடையேயான மொழிப்பிரச்சினைகள், இனப்பிரச்சினைகள். தண்ணீர் பிரச்சினைகள் மற்றும் எல்லைப் பிரச்சினைகள் தீரவும், சமூக உறவுகளில், சமாதானம் காணப்பட வேண்டி ஜெபிப்போம்.

7. ஒவ்வொரு மாநிலங்களிலும் ஊழியர்கள் பெருக வேண்டி ஜெபிப்போம்.

8. ஒவ்வொரு மாநிலங்களிலும் இரட்சிக்கப்பட்ட, கர்த்தருக்குப் பயந்து நடக்கின்ற மனிதர்கள் சட்டசபைகளுக்கென்று தெரிந்து எடுக்கப்படுவதற்கும், அமைச்சர்கள், முதலமைச்சர்களுக்காகவும் வேண்டி ஜெபிப்போம்.

## ஒவ்வொரு மாநிலத்தின் மாவட்டங்களுக்கான ஜெபக்குறிப்பகள்

1. அனைத்து மாவட்டங்களிலும் இயேசுவைக் குறித்த சாட்சி வல்லமையாய் அறிவிக்கப்பட வேண்டும்.

2. அனைத்து மாவட்ட வீதிகளிலும், திருச்சபைகள் எழும்ப வேண்டி ஜெபிப்போம்.

3. மாவட்ட நிர்வாகங்கள் நீதியும், நேர்மையுமாய் செயல்படவும், மக்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்து செயல்படவும் ஜெபிப்போம்.

4. ஒவ்வொரு மாவட்டத்திலும் மத நல்ணக்கம் காக்கப்பட வேண்டி ஜெபிப்போம்.

5. மதக்கலவரங்கள், வன்முறைகள், ஊழல், லஞ்சம் விபத்துகளை முற்றிலுமாய் குறைப்பதற்கு மாவட்ட நிர்வாகம் முனைப்பாய் செயல்பட ஜெபிப்போம்.

6. சட்டம், ஒழுங்கு காக்கப்பட, மக்கள் சுதந்திரமாய் பாதுகாப்பாய் வாழ்வதை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்ய வேண்டி ஜெபிப்போம்.

7. மாவட்ட நிர்வாகம் மதம் மற்றும் அரசியல் சார்பின்றி செயல்பட ஜெபிப்போம்.

8. மாவட்ட நிர்வாகம் மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கள் நேர்மையாய் செயல்படுத்த வேண்டி ஜெபிப்போம்.

## இந்தியாவில் நடைபெறும் ஊழியங்களுக்கான ஜெபகுறிப்புகள்....

1. வட இந்தியாவில் ஊழியங்களைச் செய்துவரும் அனைத்து மிஷனெரி ஸ்தாபனங்—களுக்காகவும், அதன் தலைவர்களுக்காகவும் ஊழியத்தின் தடைகள் நீங்கவும் ஜெபிப்போம்.

2. இந்தியாவில் நடைபெறும் அனைத்து சுவிசேஷ ஊழியங்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும், ஊழியத்தில் எதிர்ப்புகள் நீங்கவும் ஜெபிப்போம்.

3. இந்தியாவில் உள்ள அனைத்து கிறிஸ்தவ திருமண்டலங்கள், திருச்சபைகள், மற்றும் பிற சபைகளுக்காகவும், பேராயர்கள், குருமார்கள், போதகர்கள் மற்றும் விசுவாசிகளுக்காகவும் திருச்சபைப் பணிகள் தொடர்ந்து மென்மேலும் வளர்ந்து பெருகவும் ஜெபிப்போம்.

4. சமுதாயப் பணி, இலக்கியப்பணி, ஆடியோ, வீடியோ மற்றும் தொலைக்காட்சி ஊழியங்கள் போன்றவற்றைச் செய்து வரும் கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்காக ஜெபிப்போம்

# ஷாலோம் வேத வினாப் போட்டி 33

குறிப்பு : ( I, II சாமுவேல் புத்தகங்களிலிருந்து விடை காணவும்)

1. அப்னோன் தகப்பன் பெயர் என்ன?
2. 'நீர் எங்களுக்கு அநியாயம் செய்யவும் இல்லை எங்களுக்கு இடுக்கண் செய்யவும் இல்லை' என்று யார் யாரைப் பார்த்து சொன்னது?
3. கதவுகளும் தாழ்ப்பாள்களும் உள்ள பட்டணம் எது?
4. முரடனும் துராகிருதனுமாயிருந்த மனுஷன் யார்? அவன் எந்த சந்ததியான்?
5. அப்னேர் தாவீதை சவுலுக்கு முன்பாக அழைத்துக் கொண்டு போகையில் தாவீதின் கையில் என்ன இருந்தது?
6. தாவீது யூதாவின் மேல் எத்தனை வருடம் அரசாண்டான்?
7. அப்சலோமின் படையோடு தாவீதின் மனிதர்கள் யுத்தம் செய்த போது எது அப்சலோமின் மனிதரை அதிகம் பட்சித்தது?
8. ஆகாதவர்களிடத்திலே ஆகாமியம் பிறக்கும் சொன்னது யார்? யாரிடம்?
9. அம்மோனியனாகிய நாகாஸ் இஸ்ரவேலோடு எப்படி உடன்படிக்கை பண்ணுவேன் என்றான்?
10. சவுலின் குமாரத்தி மீகாளின் தாவீது அல்லாமல் புருஷன் யார்?

**வேதவினாப் போட்டியில் பங்குபெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள்**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில் களை மட்டும் தெளிவாக எழுதினால் போதும்
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 16.08.2016



## கடந்த ஜூன் மாத வேதவினா போட்டி எண் 32க்கான சரியான விடைகள்

1. சவுல் தாவீதைப் பற்றி - 1 சாமு. 17:2
2. ஏலே அல்லது ஏலா - 1 சாமு. 17:2, 21:9
3. சாமுவேல் கில்காலில் - 1 சாமு. 15:33
4. தாதி அவனை சுமந்துக் கொண்டு ஓடிப்போகிற அவசரத்தில் கீழே விழுந்து முடவனானான். - 2 சாமு. 4:4
5. ஆதரியேல் - 1 சாமு. 18:17,19
6. ஏலியின் குமாரர் - 1 சாமு. 2:12
7. தாவீது - ரூத் 4:17,22
8. பானா, ரேகாப் - 2 சாமு. 4:2
9. 33 வருஷம் - 2 சாமு. 5:5
10. தோவேக்கு - 2 சாமு. 22:9,10

**கடந்த ஜூன் மாத வேத வினா போட் எண் 32இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்**

1. சகோதரி K. ஈவ்லின் சுகுணா, கன்னியாகுமரி மாவட்டம்
2. சகோ .C. ஜோதி குமார், ஓசூர்
3. சகோதரி சுமித்ரா டேவிட், சென்னை.

## பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி

**SHARING LOVE MISSION**
New No.5A/323, Old. No.5/168.
Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 00.8. Tamil Nadu.
Phone : 0461 - 2375468

வாசகர்கள் தங்கள் பதில்களை
9345675468 - என்ற மொபைல் எண்ணிற்கு
SMS மூலமாகவோ What Appமூலமாகவோ
அனுப்பலாம் அல்லது
info@shalommission.in
என்ற ஈ-மெயிலும் அனுப்பலாம்.

WhatsApp

# ஆகஸ்ட் மாத ஷாலோம் உபவாச ஜெபங்கள்

| நாள் & நேரம் | இடம் |
|---|---|
| 13.08.2016 சனிக்கிழமை நேரம் மாலை 5.00 மணிக்கு | M.T.N பில்டிங் (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம் தொடர்புக்கு சகோ. **செல்வத்துரை**, செல் : 94876 89869 சகோ. **ஜார்ஜ்**, செல் : 98944 78405 சகோ. **கிங்பெர்ட்**, செல் : 94868 64820 |
| 20.08.2016 சனிக்கிழமை நேரம் காலை 10.00 மணி முதல் 1.00 வரை | எபனேசர் பிளாசா, பரமா தெரு ஜங்சன், நாகர்கோவில். தொடர்புக்கு செல் 96881 44522 |
| 27.08.2016 சனிக்கிழமை நேரம் காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை | எண் 102, 2வது மெயின் ரோடு, சத்யா நகர், பாடி, சென்னை தொடர்புக்கு சகோ.ஜாண் ஜெயசிங்,செல்96982 44577 |

**தூத்துக்குடி தலைமை,அலுவலகத்தில் நடைபெறும்**

## வாக்குத்தத்த உபவாச ஜெபக் கூடுகை

நாள் : 01.08.2016 (திங்கட்கிழமை) நேரம் : காலை 9.15 முதல் 1.00 மணி

தேவசெய்தி :**Prof.C.S.** கிறிஸ்டோபர், பாளையங்கோட்டை

இடம் : *அன்பு பகிர்வு இயக்கம் தலைமை அலுவலகம்*

No. 5A/323, கால்டுவெல் காலனி 3வது தெரு,

தூத்துக்குடி-628 008.

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களுக்காகவும், இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**

## ஷாலோம் ஜெபக்குழு

பிரியமானவர்களே, கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நமது ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கும் அநேக ஜெபக்குழுக்களை தேவன் தந்துள்ளார். இந்த ஜெபக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றமைக்காக தேவனைத் துதிக்கிறோம்.

இதை வாசிக்கின்ற உங்களையும் மாதம் ஒருமுறை கூடி ஷாலோம் ஊழியங்களுக்காகவும், இந்தியத் தேசத்திற்காகவும்ஜெபிக்கும்படியாக தேவன் ஏவுவாராகில் உங்கள் பகுதியில் ஒரு ஜெபக்குழுவை ஆரம்பித்து ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்பி வைக்கிறோம். தேவன் தாமே ஜெபத்தின் மூலம் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக! தொடர்புக்கு: 9688744522, 0461 2375468, 2377737

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- **தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**
- **உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**
- **காணிக்கைகளை** E.M.O. **மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு கிளை : சிதம்பரநகர் என்று அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக் கொள்கிறோம்.**
- SHARING LOVE MISSION **என்ற பெயருக்கு** D.D. **அல்லது** Cheque **எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவு தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.**
- **உங்களது வங்கிக் கணக்கிலிருந்து,** Net Transfer **மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.**
- **நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில்** Cash (or) Cheque (or) D.D. **மூலம்** Deposit **பண்ணலாம்.**
- **எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.**

---

**வங்கிக் கணக்கின் பெயர் : Sharing Love Mission**

Branch : Tuticorin. **கிளை : தூத்துக்குடி**

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

**நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில்** Cash (or) Cheque (or) D.D. **மூலமாகவோ அல்லது** Net Transfer **மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை** e-mail, Phone, SMS, Whats app **மூலமாக எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு** : 93456 75468

## உங்கள் ஜெப உதவிக்கு ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE** **SHARING LOVE MISSION, Bro. Sam Gunaseelan**

No. 5A/323,-3rd Street, Caldwell Colony, TUTICORIN-628008
Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

**CHENNAI BRANCH OFFICE**

**Bro. John Jeyasingh** No.102-2nd Main Road Sathya Nagar, Padi,
CHENNAI - 600050,Cell : 9698244577

**NAGERCOIL BRANCH OFFICE** **Bro. Robinson. S.**

Ebenezer Plaza, Parama Street, WCC Junction,Nagercoil - 629001
Cell : 9688144522, 9698444522

**MARTHANDAM BRANCH OFFICE** **Bro. Selvadurai.G**

M.T.N. Building, North Street, Near Women's Police Station,
Marthandam, K.K. Dist. - 629165, Cell : 9487689869, 9659644500

**MADURAI BRANCH OFFICE** **Bro. Chandra Paul. S**

6/3, Nellaiappar Puram 7th Street,Tirunagar (p.o)
MADURAI-625006, Cell : 9698644522

**TIRUNELVELI BRANCH OFFICE** **Bro. David. R**

56 A/4,-C.S.I Church South Street, (Upstairs) STC road, Perumalpuram,
Palayamkottai TIRUNELVELI-627007, Cell 9698844599

**MUMBAI BRANCH OFFICE** **Bro. Jacob. N.**

Bathani Bhavan, Room No. 11, First Floor, R. No. 2, Gate No. 6,
Malvani, Malad West, Mumbai - 400095,Cell : 09819554974

**COIMBATORE BRANCH OFFICE** **Mr.Yardli Vinodh.J**

No: 31 LakshumiGarden, Palaya Pudur, Periyanayakkan palayam,
Coimbatore -641020, Cell : 9698144522

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

Shalom Charity Mission

## SHALOM CHARITY MISSION

Branch : Tuticorin,

AXIS BANK

Branch : Tuticorin,

**10501010009 6779 -**

(IFS Code : UTIB0000105)

TMB

**Tamilnad Mercantile Bank**

**174100710400061**

(IFS Code : TMBL0000174)

**Branch : Tiruchendur Road**

# நாட்டு நடப்புச் செய்திகள்

## ஆதார் அட்டை இல்லாதோருக்கு கேஸ் மானியம் நிறுத்திவைப்பு : பொது மக்கள் அதிர்ச்சி

ஆதார் அட்டை இல்லாதவர்களுக்கு சமையல் எரிவாயு மானியம் வழங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.கடந்த ஒரு வாரமாகவே ஆதார் அட்டை இல்லாத வாடிக்கையாளர்களுக்கு சமையல் கேஸ் மானியம் வழங்கப்படவில்லை இது பொது மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.இது தொடர்பாக சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகஸ்தர்கள் தரப்பில், வீட்டு சமையல் காஸ் சிலிண்டர் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் வங்கி மற்றும் கேஸ் ஏஜென்சிகளில் வருகின்ற செப்டம்பர் மாதத்திற்குள் ஆதார் அட்டை விவரத்தை வழங்காவிட்டால் கேஸ் மானியத்தை நிறுத்த எண்ணெய் நிறுவனங்கள் அறிவுறுத்தியுள்ளன.

## வியாழன் கிரகத்தை ஆராயும் பணியை தொடங்கியது ஜூனோ விண்கலம்

அமெரிக்காவின் நாசா நிறுவனம் அனுப்பி வைத்த ஜூனோ விண்கலம் 5 ஆண்டுகால பயணத்துக்கு பின், தற்போது வியாழன் கிரகத்தின் வட்டப் பாதையில் விண்கலம் வெற்றிகரமாக நிலை நிறுத்தப்பட்டது. சூரியக் குடும்பத்தின் மிகப் பெரிய கிரகமான வியாழன் கிரகத்தை பற்றி ஆய்வு செய்வதற்காக நாசா விஞ்ஞானிகள் ஜூனோ விண்கலத்தை தயாரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜூபிடரின் சுற்றுப் பாதைக்குள் நுழைந்த பிறகு, அந்த விண்கலத்தின் முக்கிய என்ஜின் 35 நிமிடங்களுக்கு எரிந்து செயல்படுத்தப்பட்டது. இதனையடுத்து தற்போது வியாழன் கிரகத்தின் மேற்பரப்பு மற்றும் உள்பரப்பை ஆராயும் பணிகளை தொடங்குகிறது.


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

**தலைமை அலுவலகம்**

**SHARING LOVE MISSION**
No. 5A/323, Caldwell Colony,
3rd Street, Tuticorin - 628 008.
Tamil Nadu.
Phone : 0461-2375468, 2377737
Cell : 9345675468

**பணித்தள அலுவலகம்**

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Phone : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in Website : www.shalommission.in**

# கிராம ஆலய அறிக்கை

## கர்பாடா - குஜராத்



கர்பாடா (மொருனியா ஃபளியா) என்ற கிராமம் குஜராத் மாநிலம் தாகோத் மாவட்டத்தில் கர்பாடா தாலுகாவில் அமைந்துள்ளது. இந்தக்கிராமத்தில் வாழும் மக்கள் சாராயம், பீடி, தம்பாக்கு போன்றபாவங்களுக்கு அடிமையாகவும், விக்கிரக ஆராதனை செய்பவர்களாகவும் வாழ்பவர்களாகவும் ஊழியர். ரம்சுகொஹனியா அவர்கள் இயேசுவை அறியாதபோது சாராயம், பீடி, தம்பாக்கு, போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்துவந்தார்.

இவரது தாயார் ஜானகிபேன் அவர்களும் இவரது மனைவியும் பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு, மிகவும் கஷ்டப்பட்டார். விடுதலைக்காக எவ்வளவோமந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்தபலனுமில்லை. இந்நிலையில் ஷாலோம் ஊழியர். மடியாசங்காடா அவர்கள் இயேசுவைப் பற்றிக் கூறி, இவருடைய தாயாருக்காகவும் மனைவிக்காகவும் ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலையைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் இயேசுவை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக் கொண்டார்கள்.

பின்பு சுபாய் அவர்கள் வீட்டில் ஊழியர். மடியாசங்காடா அவர்கள் 2003ல் 13 பேருடன் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். கூட்டத்தில் கலந்துகொண்ட காளிபேன் என்ற சகோதரி பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்தார். ஊழியர் ஜெபித்ததில் தேவன் பரிபூரணசுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் அநேகர் சபைக்குவர ஆரம்பத்தார்கள்.

பின்பு ரம்சுகொஹனியா அவர்கள் ஊழியம் செய்யவேண்டுமென்றபாரம் ஏற்பட்டு, தன்னை அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து 1 மாத ஊழியப்பயிற்சி பெற்று, தனது வீட்டில் நடைபெற்று வந்த கூட்டத்தைதான் பொறுப்பேற்று நடத்த ஆரம்பித்தார். உபவாச ஜெபம், பெண்கள் கூட்டம், மூப்பர்கள் கூட்டம், சுகமளிக்கும் கூட்டம் ஆகியவற்றின் மூலம் சபை வளர்ந்துபெருகியது. தற்போது 21 குடும்பங்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, வாரந்தோறும் ஆராதித்துவருகிறார்கள்.

இந்நிலையில் ஊழியர். ரம்சுமொஹனியா அவர்கள் காணிக்கையாக கொடுத்த தனது சொந்த நிலத்தில் தேவநாமமகிமைக்காக புதிய ஆலயம் கட்டப்பட்டு, 03.07.2016 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் மூலம் ஜெபித்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவனுக்கே மகிமை

**Sponsored By : இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள், நாலுமாவடி**

**ரூ.5 இலட்சம் (அ) ரூ.3 இலட்சம் (அ) ரூ.2 இலட்சங்கள் மதிப்புகளில் 2016ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்**

- உங்கள் சபையின் சார்பிலோ, உங்கள் குடும்பத்தின் சார்பிலோ ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.
- மேலும் உங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு இந்த மிஷனெரி ஊழியத்தினை அறிமுகம் செய்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.
- சபை போதகர்கள் உங்கள் சபை விசுவாசிகளை உற்சாகப்படுத்தி கவர் மூலமாக காணிக்கை சேகரித்து ஆலயங்களை கட்ட முன்வரலாம்.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449. Postal Regn. No. : TTN/07/2015-2017.
TN/WPP-95/SR/2015-2017, Date of Publication : 25th of every month.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD PROJECT



| | |
|---|---|
| பெயர் | : அர்ஜூன் புரியா |
| தகப்பனார் பெயர் | : கௌதம் புரியா |
| தாயார் பெயர் | : சீமா புரியா |
| படிக்கும் வகுப்பு | : **2nd Std** |
| பிறந்த நாள் | : *17-04-2008* |
| சொந்த ஊரின் பெயர் | : துமடியா |
| தாலுகா | : மேக்நகர் |
| மாவட்டம் | : ஜாபுவா, மத்தியபிரதேசம் |

*மாணவரின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்* : இவனுடைய தகப்பனார் இயேசுவை அறியாத போது சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். அர்ஜீனின் சகோதரன் இழுப்பு வியாதியினால் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டான். சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் ஷாலோம் மான்ட்லி சபையில் நடைபெற்ற கூட்டத்திற்குச் சென்று பங்கு பெற்றார்கள். அங்கு ஊழியர் ஜெபித்ததில் தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலம் இயேசுவை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து ஷாலோம் மான்ட்லி சபைக்குச் சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தார். கடந்த 6 வருடங்களாக ஷாலோம் மான்ட்லி சபையில் விசுவாசியாக இருந்து வருகிறார்.

*திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை* : அர்ஜீன் நன்றாகப் படிப்பான். நன்றாக ஜெபிப்பான். விளையாட்டில் ஆர்வமுண்டு. இவனுக்கு 2 சகோதரர்களும், 2 சகோதரிகளும் உள்ளனர்.

*ஜெபியுங்கள்* : இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற கூலி வேலைக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**Sponsor's Name : Mr. Joshua Immanuel, Kanyakumari,**

**ஜெபித்து தாங்க முன் வாருங்கள்**

பிரியமானவர்களே நீங்களும் ஜெபித்து மாதம் ரூ.700 கொடுத்து பீல்ஆதிவாசி மாணவரைத் தாங்க முன்வரலாம். *Shalom Charity Mission*என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை *D.D.*அல்லது மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்தி வையுங்கள்

Owned and Published by V. Devadass from New No.5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S. Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin-628 002. Editor : V. Devadass